# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 13 வியாழக்கிழமை (28.12.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 09



ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து


## ஊரடங்கு நேரம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று முதல் 2 மணித்தியாலங்களால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இரவு 9 மணி முதல் அதிகாலை 4 மணிவரையும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என யாழ்.சிவில் நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மைக்காலமாக இரவு 11 மணி முதல் 4 மணிவரையும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வடக்குக்கு பொருள்கள் அனுப்பும் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது

### ஐ.நா.கண்காணிப்புக்குழு அறிக்கை

(கொழும்பு)

வட பகுதிக்குத் தேவையான அத்தி யாவசிய உணவுப் பொருட்களை கப்பல் மூலம் அனுப்பி வைக்கும் அரசாங்கத்தின் திட்டம் வெற்றிகரமான முறையில் நடை முறைப் படுத்தப்பட்டு வருதாக ஐ.நா.கண்காணிப்புக் குழு உறுதிப்படுத்தியுள்ளதாக தகவல் திணைக் களம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் விவகார மற்றும் அவசரகால நிவாரணங்கள் தொடர்பான ஒருங்கிணைப்பாளர் யான் எகலண்ட் அனுர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சர் மகிந்த சமரசிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் இது பற்றி அறிவித்துள்ளதாக தெரிவிக்கப் பட்டது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் நேற்று மோதல்

(யாழ்ப்பாணம்)

முகமாலைப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை 5 மணியளவில் படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக ஊடக தகவல் மையம் தெரிவித்துள்ளது.

இத் தாக்குதல் சம்பவத்தையடுத்து படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் விடுதலைப்புலிகள் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் சடலங்களையும் மீட்டுள்ளதாகவும் தகவல் மையம் தெரிவித்துள்ளது. (எ-133)

# இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜனவரியில் இலங்கை வருகிறார்

## இனப்பிரச்சினை குறித்து ஆராய்வார்

(கொழும்பு)

இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஜனவரி 8 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார். இலங்கை வரும் அவர் இனப்பிரச்சினை தொடர்பாகவும் தமிழர் தாயகப் பகுதியில் நடைபெற்று வரும் வன்முறைச் சம்பவங்கள் குறித்தும் ஜனாதிபதியுடன் பேசவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (04 ஆம் பக்கம் பார்க்க)



## ஊழிய நம்பிக்கை நிதிய அங்கத்தவரின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்

### விண்ணப்பிக்கும் முறை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் அங்கத்துவமுடையவர்களின் பிள்ளைகள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் போது அவர்களில் தெரிவு செய்யப்படுவர்களுக்கு ரூபா 10 ஆயிரம் ஊழியர் நம்பிக்கை நிதியத்தினால் வழங்கப்படுவது வழமையாகும்.

இவ் வருடமும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் அங்கத்தவர்கள் பலர் எமது அலுவலகத்திற்கு வருகை தந்து அதற்குரிய விண்ணப் பப்படிவம் தருமாறு கோருகின்றனர்.

அப்படிவங்களை தொழில் அலுவலகத்தில் பெறமுடியாது. அதனைப் பெறுவதற்கு பின்வரும் (04 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தின் தீர்வுத்திட்டம் ஜனவரியில் முன்வைக்கப்படும்

(கொழும்பு)

இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான தீர்வை முன்வைக்க அமைக் கப்பட்ட அனைத்துக் கட்சிகுழுக்கூட்டத்தில் அரசு தனது தீர்வுத்திட்டத்தை அடுத்தமாதம் முன்வைக்கவுள்ளதாக அனைத்துக்கட்சிக் குழுவின் தலைவரும் விஞ்ஞானத்தொழில் நுட்பத்துறை அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸவிதாரன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது, இந்தத்திட்டம் மாகாணங்களுக்கான தனியான அதிகாரங்களைக் கொண்டுள்ளது. தீர்வுத்திட்டத்தை முன்வைப்பதற்கு முன்னதாக ஜனவரி இரண்டாம் வாரம் அனைத்துக் கட்சிக்குழு கூடவுள்ளது.

அதன்போது மேலும் விவாதங்கள் நடத்தப்படும் இந்தத்தீர்வுத்திட்டம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பையும் அவர்களின் ஆசைகளையும் நிறைவு செய்யும். ஆனால் விடுதலைப்புலிகளை திருப்திசெய்யவேண்டியது எங்களின் வேலை அல்ல.

எனினும் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும் என நம்புகின்றோம். ஜே.வி.பி.மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் இந்தத்தீர்வுக்கு ஒத்துழைப்பை வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

ஜே.வி.பியின் நிபந்தனைகளை ஏற்று தீர்வுத்திட்டத்தை கைவிட முடியாது. எனினும் புத்தி ஜீவிகள் குழு (04 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோலின் விலை 5 ரூபாவால் அதிகரிப்பு

(கொழும்பு)

பெற்றோலின் விலையை மேலும் 5 ரூபாவால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தலைவர் அசந்த டிமெல் தெரிவித்துள்ளார்.

அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து இந் நடைமுறை அமுலுக்கு வரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். எனினும் டீசல் ,மண்ணெண்ணெய் போன்றவற்றின் விலையில் மாற்றம் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (சு)

## அனல் மின்நிலைய ஒப்பந்தம் ஜனவரியில் கைச்சாத்து !

(கொழும்பு)

திருகோணமலை சம்பூரில் அனல் மின் நிலையம் அமைக்கும் ஒப்பந் தத்தில் கைச்சாத்திடுவதற்காக இந்திய மின் சக்திஎரி பொருள்த்துறை அமைச்சரின் செயலாளர் ஆர்.வி.சப்றி கொழும்புக்கு வரவுள்ளார்.

இந்த ஒப்பந்தம் மின்சக்தி எரிபொருள்த் துறை அமைச்சின் காரியாலயத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் அடுத்தமாதம் 5 ஆம் திகதி கைச்சாத்திடப்படவுள்ளது.


இந்திய மின்சக்தி எரிபொருள்த்துறை அமைச்சரின் செயலாளர் ஆர்.வி.சப்றியும் இலங்கை மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் ஜோன் செனிவிரட்னவும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளனர்.

இந் நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத்தூதுவர் அலோப்பிரசாத்தும் பங்குபற்றுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

500 மில் (04 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை கடற்படை முகாமுக்கு ஜனாதிபதி மகிந்த நேற்று விஜயம்

(கொழும்பு)



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திருகோண மலை கடற்படை முகாமிற்கு நேற்றுக் காலை விஜயம் செய்துள்ளார். அங்கு கடற்படையினர் விசேட அணிவகுப்பு மரியாதையை ஜனாதிபதிக்கு வழங்கினார்கள்.

56 வருட காலப்பகுதியில் ஜனாதிபதி யொருவர் அம் முகாமிற்கு விஜயம் செய்தது இதுவே முதற்தடவையாகும். கடற்படையின் போறாப்படகில் இருந்து திருகோணமலை துறை முகப்பிரதேசத்தையும் அங்கு கடமை யில் ஈடுபட்ட கடற்படைப் படகுகளையும் ஜனா திபதி அவதானித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பால்மா பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்துமா மன்றத்தினர் சார்பில் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்களால் அல்லைப்பிட்டிக் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து யாழ்.கதீஜா வித்தியாலய முகாமில் தங்கியிருப்பவர்களுக்கு ஒரு தொகை ஹைலண்ட் பால்மா பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டன. (அ)

## திருவாசகம் முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் திருவாசகம் முற்றோதல் எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 7 மணி தொடக்கம் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் என யாழ். சைவபரிபாலன சபை அறிவித்துள்ளது.(ஏ)

## காதலர்கள் இருவர் குளத்தில் வீழ்ந்து மரணம்

இளம் பெண்ணை காதலித்த விடயம் முதல் மனைவிக்குத் தெரியவந்ததையடுத்துக் காதலர்கள் இருவரும் தற்கொலை செய்துள்ளனர். இச் சம்பவம் நேற்று முன்தினமிரவு கந்தரோடையில் இடம்பெற்றுள்ளது. இப்பகுதியில் இருக்கும் குளம் ஒன்றிலிருந்து இருவரது சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இவர்களது மரணவிசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாவது, 37 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவர் 21 வயதுடைய இளம்பெண் ஒருவரைக் காதலித்து வந்துள்ளார். இந்நிலையில் அவரது காதல் விவகாரம் அவரது மனைவிக்குத் தெரியவந்துள்ளது.

இதனால் இருவருக்குமிடையே விரிசல் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அக் குடும்பஸ்தர் தனது காதலியுடன் சென்றுள்ளார்.

இந்நிலையில் முதல் மனைவி செய்த முறைப்பாட்டினையடுத்து சுன்னாகம் பொலிஸார் அவர்களை விசாரணை செய்ததுடன் முதல் மனைவியுடன் சேர்ந்து வாழுமாறும் அக் குடும்பஸ்தருக்குக் கூறி அனுப்பி வைத்துள்ளனர். அங்கிருந்து சென்ற காதலர்கள் இருவரும் கந்தரோடையில் உள்ள குளத்தில் குதித்துத் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

நேற்றுக் காலை இருவரது சடலங்களும் குளத்தில் இருந்து மீட்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றன. விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் மாவட்ட பதில் நீதிவான் வசந்தசேனன் சடலங்களைப் பிரேதபரிசோதனைகளின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (எ-5)

## சிக்கின்குனியா மருத்துவ முகாம்

ஊரெழுவில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையினால் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஊரெழு பாரதி சனசமூக நிலையத்தில் சிக்குனியா மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

இம் மருத்துவ முகாமில் சிக் கின்குனியா நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்படவுள்ளது. (எ-134)

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு வருமாறு;

த.தேவதர்ஷினி (173), சி.லக்ஷனா(167), இ.லாவண்யா(136), ச.சிந்துஜா(135). (ச)

## வவுனியாவில் கிளைமோர் பொலிஸ் கான்ஸ்டபிள் பலி

(வவுனியா)

வவுனியா பூந்தோட்ட வீதியில் இடம் பெற்ற கிளைமோர்க் குண்டு வெடிப்பில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை 8.45 மணியளவில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை வீதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர்க் குண்டு வெடித்தபோதே இந்த பொலிஸ் அதிகாரி பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வவுனியா நெல்லுக்குளம் பிரதேசத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் சடலம் ஒன்றினைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

நேற்றுக் காலை பிரதேசவாசி ஒருவர் கொடுத்த தகவலையடுத்தே இந்தச் சடலத்தைப் பொலிஸார் மீட்டுள்ளனர். இதனையடுத்து அந்தப் பகுதியில் விசேட சோதனை நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## வேலையற்ற பட்டதாரிகள் மட்டக்களப்பில் போராட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் வேலையற்ற பட்டதாரிகளால் மறியல் போராட்டம் ஒன்று மாவட்ட கல்வித் திணைக்கள முன் வாயிலில் நடாத்தப்பட்டுள்ளது. நேற்றுக் காலை 7 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை இப் போராட்டம் நடைபெற்றது.

கடந்த இருவருடப் பட்டதாரிகள் சுமார் 300 பேருக்கு இதுவரையும் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படாத நிலையிலேயே இப் போராட்டம் நடைபெற்றுள்ளது.

சுமார் 100க்கும் மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் இப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

மாவட்டக் கல்வித் திணைக்கள பிரதான வாசல் கதவினை மூடி கல்வித் திணைக்களச் செயற்பாடுகள் நடைபெற அனுமதிக்காத நிலையிலேயே இப் போராட்டம் நடைபெற்றுள்ளது.

பொலிஸார் தடுத்தபோது பட்டதாரிகள் தங்களுக்கு உறுதிமொழி கிடைக்கும் வரை கல்வித் திணைக்களச் செயற்பாடுகள் நடைபெற அனுமதிக்கப்படப் போவதில்லை என கோஷம் எழுப்பியுள்ளனர்.

இதேவேளை கடந்த வருடம் வெளியான சிங்களப் பட்டதாரிகளுக்கு ஏற்கனவே ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டு விட்டன. ஆனால் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் வெளியான எமக்கு இதுவரை ஒரு உறுதிமொழி கூட இவ்வரசினால் வழங்கமுடியாதுள்ளது எனவும் கோஷமிட்டுள்ளனர்.

மேலும் ஜனவரி முதல் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ள நிலையில் அதற்கான எந்தவித முன்னெடுப்புக்களும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்தே பட்டதாரிகள் இப் போராட்டத்தில் குதித்துள்ளனர். (ச)

# வாகரைக்கான மருந்துப் பொருள்கள் இன்னமும் அனுப்பி வைக்கப்படவில்லை

## வைத்தியசாலைப் பணிப்பாளர் கவலை

(மட்டக்களப்பு)

வாகரை வைத்தியசாலைக்கு இன்னமும் மருந்துப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படவில்லை. அத்துடன் மருத்துவமனைப் பணியாளர்களுக்கான சம்பளமும் அனுப்பி வைக்கப்படவில்லை.

இதனால் மருத்துவமனை மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் வரதராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஷெல் தாக்குதல்களினால் மக்களின் இருப்பிடங்கள் அனைத்தும் சேதமடைந்து கொட்டகைகளில் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் போதிய சுகாதார வசதிகள் அங்கில்லை. தொற்றுநோய்கள் பரவுகின்றன. தினமும் 200ற்கும் அதிகமான மக்கள் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறவிருக்கின்றனர்.

ஆனால் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய மருந்துகள் வைத்தியசாலையில் இல்லை. வைத்தியசாலையை அண்மித்த பகுதிகளில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

ஒரு கிணறு மாத்திரமே இங்குள்ளது. மலசலகூட வசதிகள் அந்த மக்களுக்கு செய்து கொடுக்கப்படவில்லை. வாகரை மருத்துவமனையில் 45 கைவிடப்பட்ட வயோதிபர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த ஒருமாதத்திற்கும் மேலாக மருத்துவமனைக்கு மருந்துப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படவில்லை. பணியாளர்களுக்கான சம்பளம் இன்னும் கிடைக்கவில்லை.

உரிய அதிகாரிகளிடம் முறையிட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் வைத்தியசாலையை மூடும் நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறினார்.

அதேவேளை வாகரை வைத்தியசாலையில் இருதய நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் நேற்று மரணமடைந்துள்ளார். மட்டு. போதனா வைத்தியசாலைக்குக் குறித்த நோயாளியை இடமாற்ற அனுமதி கோரிய போதிலும் அனுமதி மறுக்கப்பட்டமையினாலேயே நோயாளி மரணமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பூரைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை (வயது-48) என்ற நோயாளியே மரணமடைந்தவராவார். (ச)

## டெஸ்டில் 700 விக்கெட்டை வீழ்த்தி ஆஸி.வீரர் ஷேன்வோர்ன் சாதனை

(மெல்பேர்ன்)

மெல்பேர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நேற்று ஆரம்பமான ஆஷஸ் தொடரின் நான்காவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய சுழல் பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன் 700-வது விக்கெட்டை வீழ்த்தி உலகில் அதிக விக்கெட்டை எடுத்தவர் என்ற சாதனையைப் பெற்றுள்ளார்.

மெல்பேர்ன் கிரிக்கெட் மைதானத்தில் இங்கிலாந்துக்கு எதிராக நேற்று நடந்த நான்காவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் முதல் நாள் ஆட்டத்தின் போது ஷேன்வோர்ன் இந்த சாதனையை நிகழ்த்தினார்.

நான்காவது ஆஷஸ் போட்டியின் ஆரம்ப நாளன்று இங்கிலாந்தின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஆண்டருஸ்ரோஸை இவர் வீழ்த்தி இந்தச் சாதனையை நிகழ்த்தினார்.

ஸ்ரோஸ் 50ஓட்டங்கள் எடுத்த வேளையில் ஷேன்வோர்ன் அவரை வீழ்த்தியுள்ளார். 37 வயதான ஷேன்வோர்ன் அடுத்த வாரம் நடக்கவிருக்கும் 5-வது ஆஷஸ் டெஸ்ட் போட்டி முடிந்ததும் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறப் போவதாக சமீபத்தில் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் அவர் இந்தச் சாதனையை நிகழ்த்தி பார்வையாளர்களின் பலத்த கரகோஷத்தை பெற்றார். நேற்று ஆரம்பமான டெஸ்ட் போட்டி ஷேன்வோர்னின் 144-



வது டெஸ்ட் போட்டி. அவர் சராசரியாக ஒரு விக்கெட்டை வீழ்த்த 25.48 ஓட்டங்களைக் கொடுத்துள்ளார்.

டெஸ்ட் போட்டி வரலாற்றில் முதன்முறையாக 700 விக்கெட்டை வீழ்த்திய ஷேன்வோர்னுக்கு கிரிக்கெட் மைதானம் முழுவதிலும் இருந்த ரசிகர்கள் பலத்த ஆரவாரத்துடன் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

இவருக்கு அடுத்ததாக இலங்கையணியின் நட்சத்திர பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் 674 விக்கெட்டுக்களை வீழ்த்தி இரண்டாம் இடத்தில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## கடத்தப்பட்டவர்களில் நால்வர் விடுதலை

மட்டக்களப்பு ஏறாவூர் கோரைக்கல்லிமடுப் பகுதியில் பஸ்ஸில் பயணித்தவேளை கடந்த 20 ஆம் திகதி இனந்தெரியாதோரால் கடத்தி செல்லப்பட்ட 19 பேரில் நால்வர்விடுவிக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம இன்ஸ்பெக்டர் சந்திரபால தெரிவித்தார்.

கடத்தப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்ட நால்வரும் காத்தான்குடிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. செல்லத்துரை பிறேமலததாஸ் (வயது-30), ஐயாத்துரை சஜீவன் (வயது-25), பாலிபொடி கோவிந்தநாதன்(வயது-20), கந்தசாமி காந்தன் (வயது-20) ஆகிய நால்வருமே விடுவிக்கப்பட்டவர் என தெரியவருகின்றது.

காத்தான்குடியிலிருந்து கொழும்பு நோக்கி வந்த பஸ்ஸை வழிமறித்த இனந்தெரியாத ஆயுததாரிகள் 16 இளைஞர்களையும் 3 யுவதிகளையும் கடத்திச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

இக்கடத்தல் சம்பவம்குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ச)

## விடுதலைப்புலிகளின் பகுதிக்கு எரிபொருள் அனுப்ப ஏற்பாடு

(கொழும்பு)

அரச கட்டுப்பாடற்ற பிரதேச மக்களின் எரிபொருள் தேவையை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில் வாரம் ஒன்றிற்கு 6 லட்சம் லீற்றர் எரிபொருள் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் எரிபொருள் விநியோகிக்கப்படும் என்று பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேசங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக இந்த நடவடிக்கைகள் செயற்படுத்தப்படவுள்ளதாக அரச தரப்பில் கூறப்படுகின்றது.

ஓமந்தையூடாகச் செல்லும் எரிபொருள் கொள்கலன்கள் கடுமையான சோதனைக்குட்படுத்தப்படும் என்றும் பாதுகாப்புத் தரப்புத் தெரிவித்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி வடபகுதிக்கு எரிபொருள் ஏற்றிச் சென்ற 17 எரிபொருள் கொள்கலன்கள் தமிழீழ விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டதையடுத்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு எரிபொருளை ஏற்றிச் செல்ல தனியார் துறையினர் மறுத்துள்ளனர்.

இதன் காரணமாக கூட்டுறவுச் சங்கங்களின் எரிபொருள் கொள்கலன்கள் ஊடாக வடபகுதிக்கு எரிபொருள் கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## பங்கீட்டு அட்டை மீளாய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவுக்குள் இதுவரை பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்யாத பிரதான குடியிருப்பாளர்கள் தேசிய அடையாள அட்டையுடன் டிசம்பர் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை9 மணிக்கு பிரதேச செயலகத்தில் மீளாய்வு செய்து கொள்ளுமாறு யாழ்.பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

மீளாய்வு செய்யாத பங்கீட்டு அட்டைகளுக்கு ஜனவரி முதலாம் திகதிக்குப் பின் எவ்வித பங்கீட்டுப் பொருள்களும் வழங்கப்படமாட்டாது எனவும் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ச)

நல்ல செயலை செய்ய நினைத்தால் உடனே செய். நாளும் கோளும் நல்ல செயலுக்கு சாதகமாகவேயிருக்கும்.

-சுவாமி இராமதாஸர்

வலம்புரி

# பயணத் தொல்லை முடிந்தபாடாகவில்லை

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கான பாதுகாப்பு அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் நடைமுறையில் தற்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை சிவில் நிர்வாகப் பிரிவுகளில் விநியோகிக்கப்பட்டு வந்த பயண அனுமதிப் படிவங்கள் இப்போது அந்தந்தப் பிரதேச செயலகங்கள் மூலமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

சிவில் நிர்வாக அலுவலகங்களுக்குச் சென்று அலைவதிலும் பார்க்க பிரதேச செயலகங்களுக்குச் சென்று பயண அனுமதிப் படிவங்களைப் பெறுவது பரவாயில்லை என்றால், அங்கும் நீண்ட வரிசை.

ஏற்கனவே எரிபொருள் அனுமதிக்கான அட்டையைப் பெறுவதற்காக பிரதேச செயலகங்களில் கால்கடுக்கக் காத்து நின்ற மக்கள் மீண்டும் அதே இடத்தில் பயண அனுமதிப் படிவத்திற்காக காத்திருப்பது வேதனைக்குரிய நிகழ்வாகும்.

பிரதேச செயலகங்கள் மக்களுக்கான சேவையையாற்றும் அரச அமைப்பாகும். இங்கு மக்கள் தமக்கான அலுவல்களைச் செய்து கொள்ளும் இயல்பு நிலைமை இருந்தாக வேண்டும்.

எனினும் பயண அனுமதிப் படிவங்களைப் பெறுவதற்காக மக்கள் கூட்டம் பிரதேச செயலகங்களில் நிறைந்து வழியும் போது பிரதேச செயலகத்தின் வழமையான நடவடிக்கைகள் பாதிப்படையவே செய்யும்.

எனவே பிரதேச செயலகங்கள் பயண அனுமதிக்கான படிவங்களை வழங்குவது பொருத்துடையது ஆயினும் படிவத்தை வழங்குவதற்கான நிபந்தனைகளை இலகுபடுத்துவது அவசியமாகும்.

அதாவது, பயண அனுமதிப் படிவங்களை தாராளமாக விநியோகிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

சிவில் நிர்வாகங்களில் பயண அனுமதிப் படிவங்களைப் பெறுவதில் உள்ள இட்டல் இடைஞ்சல்கள் பற்றி இவ்விடத்தில் முன்னர் பிரஸ்தாபித்திருந்தோம்.

அதற்குப் பின்னர் பிரதேச செயலகங்கள் மூலமாக பயண அனுமதிப் படிவங்களை வழங்கும் முறைமை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இம்முறைமை தற்போதைய சூழ்நிலையில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாயினும் பொது மக்களை கஷ்டப்படுத்தாமல் அவர்களுக்கான பயண அனுமதிப் படிவங்களை வழங்க வேண்டும் என்பதே பொதுவான கருத்தாகும்.

எனவே பயண அனுமதிப் படிவங்களை விநியோகிப்பதில் சிரமமான நிர்வாக நடைமுறையைக் கடைப்பிடிக்காமல் தேசிய அடையாள அட்டைகளைப் பார்வையிட்டு படிவங்களை வழங்கும் இலகு முறையைப் பின்பற்றுவது அவசியமாகும்.

ஏ-9 பாதை மூடப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கும் வெளிமாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் வருவதில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக நோயாளர்களைக் கொழும்பு போன்ற இடங்களுக்குக் கொண்டு செல்வது முடியாத காரியமாகவுள்ளது.

இதனால் உரிய காலத்தில் சிகிச்சை பெற முடியாமல் பலர் உயிரிழந்து போன சோக நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் தாராளமாக நடந்துள்ளன.

கூடவே யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்வதை இலங்கையின் எந்தச் சட்டமும் தடைசெய்வதாக இல்லை.

இந்நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்வதில் தடைகளும்-கட்டுப்பாடுகளும் விதிக்கப்படுவது மனித உரிமை மீறல் என்பதை உணர்ந்து கொள்வதும் இலகுவான பயண அனுமதிக்கு ஏற்பாடு செய்வதும் கட்டாயமானதாகும்.

# உதவி வழங்கும் நோக்கில் எந்த வெளிநாடும் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க முடியாது

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னர் இலங்கைக்கு உதவி வழங்குவதாகக் கோரி வந்த வெளிநாட்டு நிறுவனங்கள் அரசாங்கத்தின் மீது பல்வேறு அழுத்தங்களைக் கொடுக்க முயற்சி செய்தன.

இலங்கை இறைமையுள்ள நாடு என்பதுடன் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகளுக்கு எந்தவொரு வெளிநாடுகளாலும் அழுத்தங்களைக் கொடுக்க முடியாது என்று பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தின் இரண்டாவது நினைவை முன்னிட்டு தேசிய துக்கதினமான நேற்று முன்தினம் ஹிக்கடுவ பெரெலியவில் நடைபெற்ற பிரதான வைபவத்தில் கலந்து கொண்டு அங்கு நிர்மாணிக்கப்பட்ட 68 அடி உயரமான புத்தர் சிலையைத் திறந்து வைத்ததன் பின்னர் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னர் எமது நாட்டிற்குப் பல்வேறு வெளிநாடுகள் பல உதவிகளை வழங்க முன்வந்தன. எனினும் சில நாடுகள் நிபந்தனையடிப்படையில் உதவிகளை வழங்குவதற்கும் அதனூடாக அரசாங்கத்தின் மீது வேறு பல அழுத்தங்களைக் கொடுப்பதற்கும் முயற்சி செய்தன.

வெளிநாடுகள் எமது அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுப்பதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான வீடுகளைக் கட்டிக் கொடுக்க முடியாதுள்ளது.

இழந்த வேலைவாய்ப்புக்களும் முழுமையாக வழங்கப்படவில்லை. அனர்த்தத்தின் போது இழந்த உயிர்களை எம்மால் பெற்றுக் கொடுக்க முடியாது என்றாலும் ஏனைய தேவைகளை அரசாங்கம் விரைவில் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அத்தியாவசிய பொருள்களின் விலையேற்றம் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே செல்கின்ற போதும் அதனை மக்கள் பொறுத்துக் கொள்ள வேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறான பல நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே மக்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகளுக்கு அரசு தீர்வு கண்டு கொண்டிருக்கின்றது. சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னரான நிர்மாணப் பணிகள் இன்னும் முழுமையாக நிறைவடையவில்லை. 65 வீதமான நிர்மாணப் பணிகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளன. எஞ்சிய வேலைகள் விரைவில் பூர்த்தி செய்யப்படும்.

இங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை யப்பான் அரசாங்கம் எவ்விதமான நிபந்தனைகளுமின்றி நிர்மாணித்துக் கொடுத்துள்ளது. அதற்காக அரசாங்கம் என்றும் யப்பானுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது. (ச-5)

# யாழ்ப்பாணத்தில் ச.தொ.ச.வர்த்தக நிலையம் இம் மாத இறுதியில் திறக்கப்படவுள்ளது

## சமூக சேவைகள் அமைச்சுத் தெரிவிப்பு

யாழ்.நகரில் ச.தொ.ச.வர்த்தக நிலையத்தை இம் மாத இறுதிக்குள் திறப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.அரச அதிபருக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

நேற்றுக் குடாநாட்டில் ச.தொ.ச.வர்த்தக நிலையங்களில் பணியாற்றி வந்த ஊழியர்கள் அமைச்சரை அமைச்சரது யாழ்.அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியதன் பின்னர் மேற்படி நடவடிக்கையை உடன் எடுத்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ச.தொ.ச.வர்த்தக நிலையத்தை இம் மாத இறுதிக்குள் திறக்க நடவடிக்கை எடுக்கும்படி மேற்படி பணிப்புரை விடுத்துள்ளார் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் யாழ்.நகரில் ச.தொ.ச.நிறுவனம் முன்னர் இயங்கி வந்த வின்சர் தியேட்டர் கட்டடத்தில் மேற்படி வர்த்தக நிலையம் மீள இயங்கவுள்ளதுடன் இன்றுமுதல் அக் கட்டடத் திருத்தப் பணிகள் உடன் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தற்போது பணி இழந்துள்ள நிலையில் உள்ள ச.தொ.ச. பணியாளர்களுக்கு மீளப் பணிகளை வழங்கும் நோக்குடனும் குடாநாட்டு மக்களின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டும் ச.தொ.ச. வர்த்தக நிலையம் மீண்டும் யாழ்.நகரில் ஆரம்பிக்கப்படுவதுடன், குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் கூடிய விரைவில் மேற்படி வர்த்தக நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வட-கிழக்கு இணைப்பு அவசியம்

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு

(கொழும்பு)

இணைக்கப்பட்ட வட-கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இணைக்கப்பட்ட வட-கிழக்கு மாகாணத்தைப் பிரிப்பதற்கு தாங்கள் எடுக்கும்நடவடிக்கைக்கு எனது ஆட்சேபனையைத் தெரிவிப்பதற்கு பொறுத்துக் கொள்ளுமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

இம் முயற்சி பற்றி வட-கிழக்கு ஆளுநர் அறிக்கை மூலம் தெரிந்து கொண்டேன். வடக்குக் கிழக்கு மாகாண இணைப்பு நியாயமானதா? நியாயமற்றதா? என்பது பற்றி நான் விவாதிக்க வரவில்லை. நான் வற்புறுத்திக் கூறுவது அந்த நடவடிக்கைக்கு இது பொருத்தமான நேரம் அல்ல என்பதாகும்.

பிரதம அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் வழங்கிய உறுதி மொழிக்கு அமைய சம்பந்தப்பட்ட மக்களிடமே இப் பணியை விட்டுவிட வேண்டும். இப்போது சில கட்சிகள் அக் கோரிக்கையை முன்வைக்க நீதிமன்றமும் சாதகமான தீர்ப்பை வழங்கியது.

மாகாணங்களைப் பிரிக்க வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமில்லை. அதற்குப் பதிலாக விடப்பட்ட தவறுகளைப் பாராளுமன்றம் மூலம் நிவர்த்தி செய்ய முடியும். இந் நாட்டை பல தடவைகள் ஆண்ட தேசிய கட்சிகளில் ஒன்றான ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு முழுஆதரவு தருவதாக உறுதியளித்துள்ளது.

இனப்பிரச்சினை தீர்வுக்கு அரசு ஒஸ்லோ, டோக்கியோ ஒப்பந்தங்களின் அடிப்படையில் தீர்வு காண்பதற்கு கட்டுப்பட்டுள்ளது என்பதை வலியுறுத்திக் கூறுவதோடு வேறு ஏதாவது மாற்றுத் திட்டத்தைத் தமிழ் மக்கள் மீது திணிப்பதை நியாயமற்றதாக கருதுகின்றேன்.

உலகின் பல நாடுகளிலும் வாழும் தமிழர்கள் தம் நாட்டுக்குத் திரும்பி வந்து ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ், சிங்களர், முஸ்லிம் மற்றும் ஏனைய சிறுபான்மை மக்களோடு சந்தோஷமாக வாழ்வதையே விரும்புகின்றனர்.

50 ஆண்டுகளாக அமுலில் இருந்த ஒற்றையாட்சி முறையின் கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தவறிய பட்சத்தில் எமக்குள்ள எஞ்சியுள்ள ஒரே ஒரு வழி ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையை அமுல்படுத்துவதே. (ச)

# உலோகப் பொருள்கள் அடங்கிய தபால்களை ஏற்க வேண்டாம்

## யாழ்.அஞ்சல்மா அதிபர் மீண்டும் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு அனுப்பப்படும் தபால்களில் குண்டூசி, கிளிப் போன்ற உலோகப் பொருள்கள் உள்ளடங்கிய தபால்களை அனுப்புவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதால் இத்தகைய உலோகப் பொருள்களை உள்ளடக்கிய தபால்களை மாவட்டத்தில் இயங்கும் தபால் அலுவலகங்களில் பொறுப்பேற்க வேண்டாமென யாழ்.மாவட்ட அஞ்சல்மா அதிபர் என்.குமரகுரு தபாலக ஊழியர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.


இத்தகைய உலோகப் பொருள்கள் அடங்கிய கடிதங்களினால் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டு வரும் இலத்திரனியல் பரிசோதனையினால் பல்வேறு பிரச்சினைகளை தபால் உத்தியோகஸ்தர்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

இங்கிருந்து வெளிமாவட்டத்திற்கு அனுப்பும் தபால் பொதிகள் காங்கேசன் துறைமுகத்தில் வைத்து கடற்படையினரால் பரிசோதனை செய்வது வழமை.


இதனால் அவர்கள் பயன்படுத்தும் இலத்திரனியல் கருவிகளினால் சிலவேளைகளில் கடிதங்கள் உடைக்கப்படவேண்டியுள்ளது. அல்லது அவைகள் அனுப்பியவருக்கே திருப்பியனுப்ப வேண்டியுள்ளது.

இதனால் சிலவேளைகளில் ஏனையவர்களின் தபால்களும் செல்லாமல் திரும்பி வரும் சூழ்நிலையினால்தான் இவ்வாறு உத்தரவிட்டுள்ளதாக அஞ்சல் அதிபர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் யாழ்.குடாநாட்டில் தபால் சேவைகள் சுமுகமான முறையில் இடம்பெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)







திருகோணமலை கடற்படைத்தளத்துக்கு சென்ற ஜனாதிபதி அங்கு கடற்படை அதிகாரிகளுடனும் தனது மகனுடனும் உரையாடுவதையும் கப்பலில் சென்று நிலமைகளை அவதானிப்பதையும் படங்களில் காணலாம்.

# க.பொ.த.(சா.த) பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப்பணிகள் 29 ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீட்டு பணிகள் டிசெம்பர் 29 தொடக்கம் ஜனவரி 7ஆம் திகதிவரை பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை 2006 விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளன. முதலாம் கட்டமாக பிரதான பாடங்களும் இரண்டாம் கட்ட மதிப்பீட்டுப் பணியில் விருப்பத்திற்குரிய பாடங்களும் மதீப்பீடு செய்யப்படவுள்ளன.

முதலாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன.

முதலாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் 56 நிலையங்களிலும் 2ஆம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப்பணிகள் 16 நிலையங்களிலும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

முதலாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய இரண்டு நிலையங்களிலும் 29 ஆம் திகதி விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட மாட்டாது.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய இரண்டு நிலையங்களிலும் முதலாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் தரை வழிப்போக்குவரத்துப் பாதை துண்டிக்கப்பட்டிருப்பதால் 29 ஆம் திகதி விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்படமாட்டாது என்றும் யாழ்ப்பாணம் ,பருத்தித்துறை நிலையங்களில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறுவதாக இருந்ததால் இது தொடர்பான தினங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என பரீட்சைத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச)

# வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இருவர் இந்திய கடற்படையினரால் கைது

இலங்கையில் இருந்து பைபர் கிளாஸ் படகில் வந்த இரண்டு இளைஞர்களை இந்தியக்கடற்படையினர் கடந்த செவ்வாய்க்கிழமை பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர் என இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

இலங்கை உள்நாட்டுப் போர் நடந்து வருவதால் தனுஷ்கோடி-தலைமன்னார் இடையே உள்ள கடற்பகுதியில் இரு நாட்டுக் கடற்படையினரும் தொடர்ந்து தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணம் செல்லும் முக்கிய சாலை மூடப்பட்டுள்ளதால் இராமேஸ்வரம் தீவுப் பகுதிக்கு அகதிகள் வருகை குறைந்துள்ளது.

இந் நிலையில் இலங்கை வல்வெட்டித்துறையை அடுத்த ஆதிகோவிலடி பகுதியைச் சேர்ந்த தியானந்தம் (வயது 22) சுரேஸ் (வயது 19) ஆகிய இரு இளைஞர்கள் ஒரு பைபர் கிளாஸ் படகில் செவ்வாய்க்கிழமை அதிகாலை முகுந்தராயர் சத்திரம் கடற்கரைக்கு வந்தனர் என இந்திய செய்தி ஒன்று தெரிவித்தது.

இலங்கைப் படகு வருவதைக் கண்ட இந்தியக் கடற்படையினர் படகை கரைக்கு கொண்டுவரும் படி எச்சரித்தனர். இதனையடுத்து கரைக்கு வந்த படகை கடற்படையினர் பறிமுதல் செய்தனர் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# உல்லாசப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சி

(கொழும்பு)

உல்லாசப் பயணிகளின் வரவில் இம்முறை ஏற்பட்டுள்ள வீழ்ச்சியின் காரணமாக நீர்கொழும்பு நகரில் உல்லாசப் பயணத் தொழிற்துறையில் ஈடுபட்டுள்ளோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக நீர்கொழும்பு நகரில் உல்லாசப் பயணிகளுக்கான ஹோட்டல் தொழில்த்துறையில் பணிபுரியும் முகாமையாளர் ஒருவர் தெரிவிக்கையில்;

வழமையாக டிசம்பர் மாத காலப் பகுதியில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் அதிகளவில் இலங்கைக்கு வருவர். இம்முறை நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக அவர்களின் வரவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக உல்லாசப் பயணத் தொழில்த்துறையில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு நகரம் உல்லாசப் பயணிகள் அதிகளவு வருகை தரும் நகரமாகும். இத் துறையை நம்பி இங்கு பலர் உள்ளனர்.

இத் தடவை நீர்கொழும்பு நகருக்கு குறைந்தளவு எண்ணிக்கையான உல்லாசப் பயணிகளே வந்துள்ளனர். இதனால் சுற்றுலா சார் தொழில்களில் ஈபட்டுள்ள ஹோட்டல் துறையினர் ,வழிகாட்டிகள்,வாகன சாரதிகள், வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள்,பணியாளர்கள் என பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார். (எ)

## இந்திய வெளிவிவகார அமைச்சர்...

இந்தியாவின் வெளிவிவகாரத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி எதிர்வரும் ஜனவரி 08 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார். இவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தையும் நடத்துவார் என தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ள சார்க் நாடுகளின் தலைவர்களுக்கான மாநாட்டில் கலந்து கொள்வதற்கான உத்தியோகபூர்வ அழைப்பிதழ் வழங்குவதற்காகவே அவர் கொழும்புக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இந்தப் பயணத்தின் போது அமைதி முயற்சிகளின் தற்போதைய நிலைமை மற்றும் வடக்கு கிழக்கில் ஏற்பட்டுள்ள மனித அவலங்கள் குறித்தும் விவாதிக்கப்படவுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அவரை இலங்கைக்கு அனுப்புவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கை விஜயத்தின்போது இந்தியாவின் கடுமையான அறிவுறுத்தல்கள் விடுக்கப்படக்கூடும் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ச-9,133)

## திருமலை...

மேலும் ஜனாதிபதி டோறாப் படகுகள் திருத்தும் தொழிற்சாலைக்கு சென்று பார்வையிட்டார். அங்குள்ள குறைபாடுகளையும் நிவர்த்தி செய்வதற்கு ஜனாதிபதி கூடிய கவனம் செலுத்தினார்.

அங்கு கடற்படை அதிகாரிகளுக்கு விசேட உரையொன்றையும் நிகழ்த்தினார். இதே வேளை கடற்படை முகாமிற்குச் சென்ற ஜனாதிபதி அங்கு பயிற்சியில் ஈடுபட்டிருந்த தனது மகனுடனும் உரையாடியுள்ளார். (ச-133)

## வடக்குக்கு பொருள்கள்...

இதற்கான பதில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ள அமைச்சர் ஐ.நா.குழுவினரால் இனங்காணப்பட்டுள்ள பிரதேசங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது எனத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்ட ஐ.நா.குழுவினர் அங்குள்ள சமகால நிலைமை தொடர்பாக முன்னாள் பொதுச்செயலாளர் கோபி அனானிடம் அறிக்கையொன்றை சமர்ப்பித்திருந்தது.

விரைவில் யாழ்.செல்லவுள்ள அரச அதிகாரிகள் குழுவினர் யாழ்ப்பாணத்தில் மேலதிக உணவுப் பொருட்களை கையிருப்பில் வைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வர் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுவதாக சில ஊடகங்கள் தொடர்ச்சியாக சுமத்தி வரும் குற்றச்சாட்டுகளுக்கு ஐ.நா.கண்காணிப்புக்குழுவின் அறிக்கை பொருத்தமான பதிலாக அமைந்துள்ளதென அமைச்சர் தெரிவித்ததாக தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

## அரசாங்கத்தின்...

முன்னிலையில் அது ஆராயப்படும். மத்திய அரசிடம் இருந்து மாகாணங்களுக்கான தனியான அதிகாரம் என்ற தீர்வுத் திட்டத்தை எல்லோரும் ஆதரிப் பார்கள்.

அல்லது அதற்கு கூடியதாகவோ குறைவானதாகவோ ஆலோசனைகளை முன் வைப்பார்கள். இந்தியப் பஞ்சாயத்துமுறை தீர்வுக்கும் மாகாண முறைக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் உண்டு. ஆனால் இரண்டிற்கும் சில ஒற்றுமைப்பாடுகளும் உள்ளன என்றார் அவர். (எ-5)

## அனல்...

லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்படும் இந்த மின் நிலைய வேலைகள் 2010 ஆம் ஆண்டு நிறைவு பெறும். முதலில் 500 மெகாவாற் சக்தியை உற்பத்தி செய்யும் இந்த நிலையம் பின்னர் ஆயிரம் மெகாவாற் சக்தியை உற்பத்தி செய்யக் கூடியதாக உயர்த்தப்படும் எனவும் கூறப்படுகிறது. (ச-5,133)

## ஊழிய நம்பிக்கை நிதிய...

நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு யாழ்.உதவித்தொழில் ஆணையாளர் கே. கன கேஸ்வரன் அறி வித்துள்ளார்.குறித்த மாணவர் பரீட்சையில் சித்திய டைந்துள்ளார் என்பதனை அவர் பெற்ற புள்ளிகளுடன் அதிபரிடம் இருந்து கடிதம் பெற்று அப் பெற்றோர்கள் தாம் பணியாற் றும் நிறுவனத்தலைவர் மூலமாக விண் ணப்பப்படிவம் அனுப்புமாறு கோரும் கடிதத்தினை தயார் செய்து அதிபரிடம் பெற்ற கடி தத்துடன் முகாமையாளர், ஊழியர் நம்பிக் கை நிதியம், முதலாம் மாடி, தொழில் செயலகம்,தபால் பெட்டி இலக்கம் 807, கொழும்பு 05 என்ற முகவரிக்கு அனுப்பிவிண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக தகவல்களைப் பெற விரும்பு வோர் 011 2503711 என்ற ஊழியர் நம்பிக்கை நிதிய வாடிக்கையாளர் சேவை தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டும் தகவல்களைப் பெற முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (எ)

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்
2009 A/L
2009 A/L 2009 A/L
கணித, உயிரியல் பிரிவு
எமது வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம் 01.01.2007
திங்கள் காலை 10.00 மணி
(C-அ-611)

தவறிவிட்டது
103, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பேரின்பநாதன் தேன்மொழி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (796983418V), தொழில் அடையாள அட்டை ,விஷேட அடையாள அட்டை பிரதான வீதிக்கும் , யாழ்.நகரத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் மேற்படி முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு-021 222 5636, 077 9184252
(703)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.12.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.